OS: 16/2020

Date: 03.03.2023.

பெயர் : ஆண்டாள்

**வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்**

எனக்கு முத்துலட்சுமி சொந்தமா என்றால் எனது அண்ணன் மாணிக்கத்தின் மகள். முத்துலட்சுமி மாணிக்கத்தின் மூத்த தாரத்து மகள், அவரது தாயார் பெயர் நாகேஸ்வரி. நாகேஸ்வரி இறந்த பின்னிட்டு எனது அண்ணன் மாணிக்கம் ஆனந்தாயியை திருமணம் செய்துகொண்டார். மேற்படி ஆனந்தாயிக்கும், எனது அண்ணன் மாணிக்கத்திற்கும் பிறந்தவர்கள்தான் 2 முதல் 5 பிரதிவாதிகள். நான் பூலாஎரிக்காட்டில்தான் பிறந்ததில் இருந்தே இருக்கிறேன். தாவா சொத்து எவ்வளவு இருக்கும் என்றால் காடு கொஞ்சம் உள்ளது, சரியாக குறிப்பிட்டு எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

மேற்படி சொத்தினை எனது அண்ணன் மாணிக்கம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினார் என்றால் சரிதான். முத்துலட்சுமி அவரது தாயார் நாகேஸ்வரி இறந்த பின்னிட்டு எனது அண்ணன் மாணிக்கமும், ஆனந்தாயியும் சேர்ந்துதான் வளர்த்தினார்கள். முத்துலட்சுமியின் திருமணத்திற்கு எனது சகோதரிகள் அனைவரும் சென்றிருந்தோம். முறையாக முத்துலட்சுமிக்கு சீர்வரிசைகள் அனைத்தும் அளித்துதான் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். மாணிக்கத்துடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஆண்கள் 4, பெண்கள் 4. எனது தந்தை பெயர் பெருமாள். எனது 4 சகோதரிகளுக்கு போதிய சீர்வரிசைகள் செய்தார்கள்.

எனது தந்தை திருமணத்தின்போது சொத்து கொடுத்தாரா என்றால் சீர்வரிசை கொடுத்தார், சொத்து அளிக்கவில்லை. எனது அண்ணனின் 2 வது மனைவியின் மகன்கள் வாய்மொழியாக சொத்தினை பிரித்துக்கொண்டார்கள் என்றால் இல்லை. முனுசாமி 3 வது மகன் எனது அண்ணன் இறந்த பின்னிட்டு வீடு கட்டியுள்ளார். முத்துலட்சுமி பாகம் கேட்டது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது அண்ணனின் 2 வது மனைவியின் மகன்கள் தாவா சொத்தின் அத்துக்கள் கண்டு தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

எனது தகப்பனார் எனது சகோதரிகளுக்கு குலவழக்கப்படி பெண்களுக்கு சீர்வரிசைகள் செய்வது மட்டும்தான் வழக்கம் என்றும், சொத்தில் பெண்களுக்கு பாகம் கொடுப்பது வழக்கம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கிடையே 2011ம் ஆண்டில் இருந்து அவரவர்கள் சொத்தில் அத்து கண்டு பாகம் பிரித்து தனித்தனியாக சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், அந்த விவரங்கள் எனக்கு தெரியாமல் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியாமலும், வாதி முத்துலட்சுமி சொல்லி கொடுத்தன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒப்பம்/PW2
ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.